Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-5**

Name : பாண்டியராஜன்
Father / Husband name : தர்மபாலன்
Village : கீழ்மாவிலங்கை
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.01.2026

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் சமையல் வேலை செய்கிறேன். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.01.2022 அன்று இரவு 9 மணியளவில் எங்கள் ஊர் கோவில் சம்மந்தமாக ரேசன் கடை அருகே பொதுக்கூட்டம் நடந்தது. அப்போது எதிரி கிருஷ்ணமூர்த்தி அங்கு வந்து கல்லுக்கு ஏன் செலவு செய்கிறீர்கள் என்று அங்கிருந்த 8 வகையறாரிடமும் கேட்டார். அங்கிருந்த லட்சுமணன் கிருஷ்ணமூர்த்தியிடம் ஏன் இவ்வாறு கேட்கிறாய் என்று கேட்டதற்கு தேவிடியா பையா, பாடு பையா என்று அசிங்கமாக கேட்டு, லட்சுமணனின் வலது கையின் கட்டைவிரலை கடித்துவிட்டார். பின்னர் எதிரி கிருஷ்ணமூர்த்தி அங்கிருந்த வத்துமலை என்பவரின் உதட்டை கடித்து விட்டார். பின்னர் லட்சுமணனின் அக்கா சங்கீதா வந்து எதற்காக தம்பியை அடித்தீர் என்று கேட்டதற்கு அவரையும் தேவிடியா என்று அசிங்கமாக பேசி, கீழே இருந்த கல்லை எடுத்து அவரின் நெற்றியில் அடித்துவிட்டார். பின்னர் 1வது எதிரியுடன் 2வது எதிரி பாண்டியன் என்பவரும் வந்து கொலைமிரட்டல் விடுத்துச்சென்றார்கள். பின்னர் காயம்பட்ட நபர்களை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். வத்துமலையை அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். சங்கீதாவிற்கு திண்டிவனம் அரசு மருத்துவமனையில் 8

தையல்களும், வத்துமலைக்கு 18 தையல்களும் போட்டார்கள். பின்னர் நாங்கள் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையம் வந்து லட்சுமணன் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-6**

Name : அபரஞ்சி
Father / Husband name : கணபதி
Village : கீழ்மாவிலங்கை
Age : 70
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.01.2026

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி ராஜி என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 01.02.2022 அன்று மதியம் 1 மணியளவில் எங்கள் ஊர் ரேசன் கடை அருகே வெள்ளிமேபேடடை காவல் நிலையத்திலிருந்து முன்தினம் ஊர் பொதுக்கூட்டத்தில் நடந்த சண்டை சம்மந்தமாக விசாரித்து படம் வரைந்து அக்கம் பக்கம் இருப்பவர்களை வீட்டைக்கேட்டு படம் வரைந்து சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் ராஜி என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-7**

Name : வத்துமலை
Father / Husband name : ராமசாமி
Village : கீழ்மாவிலங்கை
Age : 91
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.01.2026

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 -அ.சா.3, அ.சா.6 ஆகியோர்களை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர்கள். எதிரிகள் கிருஷ்ணமூர்த்தி, அருண்பாண்டியன் ஆகியோர்களை எனக்கு தெரியும். சில வருடங்களுக்கு முன்னர் எங்கள் ஊர் ரேசன் கடை அருகே கூட்டம் நடந்தது. அதில் கணக்கு வழக்குகளை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது 1வது எதிரி கிருஷ்ணமூர்த்தி கணக்கு நோட்டை பிடிங்கி எறிந்துவிட்டார். அப்போது அங்கிருந்தவர்கள் சண்டை போட்டார்கள். நான் அங்கு உட்கார்ந்திருந்தபோது 1வது எதிரி கிருஷ்ணமூர்த்தி என்மீது எனது வாயைக்கடித்துவிட்டார். பின்னர் எனது பேத்தியை அழைத்துக்கொண்டு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார், பின்னர் மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன், அங்கு எனக்கு வாயில் 18 தையல்கள் போட்டார்கள். எனது ஊர்க்காரர்கள் பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். கூட்டத்திலிருந்த ஒரு பெண் மற்றும் அவரின் தம்பிக்கும்

அடிப்பட்டது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சிக்கு வயது 91 என்றபோதிலும், போதிய கால அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-8**

Name : சங்கீதா
Father / Husband name : முருகன்
Village : கீழ்மாவிலங்கை
Age : 38
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 21.01.2026

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது தம்பி, அ.சா.2 எனக்கு தெரியாது. அ.சா.3 முனுசாமி, அ.சா.5 பாண்டியராஜன், அ.சா.7 வத்துமலை ஆகியோர்களை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகள் கிருஊ்ணமூர்த்தி, அருண்பாண்டியன் ஆகியோர்களை எனக்கு தெரியும். 31.01.2022 அன்று இரவு 9 மணியளவில் எங்கள் ஊரில் ரேசன் கடை அருகே திருவிழா சம்மந்ததமாக பொதுக்கூட்டம் நடந்தது. அதில் எனது தம்பியும் இருந்தார். அப்போது எதிரி கிருஊ்ணமூர்த்தி எனது தம்பியை அடித்தார், அதனை நான் கேட்டபோது எதிரி கிருஊ்ணமூர்த்தி என்னை தேவிடியா என்று அசிங்கமாக திட்டி, கீழே கிடந்த செங்கல்லை எடுத்து எனது தலையில் அடித்துவிட்டு, என்னைக்கேட்டால் கொன்னுவிடுவேன் என்று மிரட்டினார். எனது தம்பிக்கு மோதிரம் விரலில் அடிப்பட்டது. அ.சா.7 வத்துமலைக்கு வாயில் அடிப்பட்டது. பின்னர் அடிப்பட்ட என்னையும், எனது தம்பியையும், வத்துமலை என்பவரையும் அங்கிருந்தவர்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். வத்துமலை

என்பவரை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அதில் எனக்கு தலையில் 6 தையல்கள் போட்டார்கள். எனது தம்பி சம்பவம் குறித்து பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.